# இங்கிலாந்து பிரதமருடன் பிரதமர் மோடியின் சந்திப்பு

செப்டம்பர் 09, 2023

பிரதமர் திரு நரேந்திர மோடி, 9 செப்டம்பர் 2023 அன்று புது தில்லியில் நடக்கும் ஜி20 உச்சிமாநாட்டின் இடையே, இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக்குடன் இருதரப்பு சந்திப்பை நடத்தினார். 2022 அக்டோபரில் பிரதமரான பிறகு, பிரதமர் சுனக் இந்தியாவுக்கு வருவது இதுவே முதல் முறையாகும்.

பல்வேறு ஜி20 கூட்டங்கள் மற்றும் நிகழ்வுகளில் உயர்மட்ட பங்கேற்பால் குறிக்கப்பட்ட இந்தியாவின் ஜி20 தலைமையின் போது பிரிட்டன் வழங்கிய ஆதரவரிக்கு பிரதமர் தனது பாராட்டுகளைத் தெரிவித்தார்.

இந்தியா-இங்கிலாந்து விரிவான மூலோபாய கூட்டாண்மை மற்றும் திட்ட வரைபடம் 2030, குறிப்பாக பொருளாதாரம், பாதுகாப்பு, தொழில்நுட்பம், பசுமை தொழில்நுட்பம் மற்றும் காலநிலை மாற்றம், சுகாதாரம் மற்றும் போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பின் முன்னேற்றம் குறித்து இரு தலைவர்களும் திருப்தியுடன் குறிப்பிட்டனர். இரு தலைவர்களும் முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் பரஸ்பர நலன் சார்ந்த சர்வதேச மற்றும் பிராந்திய பிரச்சினைகள் குறித்தும் கருத்துகளை பரிமாறிக் கொண்டனர்.

இரு தலைவர்களும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தப் பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்தனர் மற்றும் மீதமுள்ள பிரச்சினைகள் விரைவில் தீர்க்கப்படும் என்று நம்பிக்கை தெரிவித்தனர், இதனால் ஒரு சமநிலையான, பரஸ்பர நன்மை மற்றும் முன்னோக்கு சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் விரைவில் முடிவடையும்.

விரிவான கலந்துரையாடலுக்காக, பரஸ்பர வசதியான தேதியில், இருதரப்பு பயணமாக இந்தியா வர பிரதமர் மோடி, பிரதமர் சுனக்கை அழைத்தார். பிரதமர் சுனக் அழைப்பை ஏற்று, வெற்றிகரமான ஜி20 உச்சிமாநாட்டிற்கு பிரதமர் மோடிக்கு வாழ்த்துத் தெரிவித்தார்.

**புது தில்லி**
**செப்டம்பர் 09, 2023**